விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 159 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 13 வெள்ளிக்கிழமை (27.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



பதவி விலகுகிறார்
## இராணுவத் தளபதி
சவேந்திர சில்வா

05 ஆம் பக்கம் பார்க்க



மருந்துகளுக்கு பற்றாக்குறை
நாட்டில்
## சுகாதார அவசரகாலநிலை பிரகடனம்

03 ஆம் பக்கம் பார்க்க



இலங்கையில்
## உணவுத் தட்டுப்பாடு
உக்கிரமடையும்
அபாய எச்சரிக்கை

03 ஆம் பக்கம் பார்க்க



9ஆம் திகதி வன்முறை
## முன்னாள் பிரதமர் மகிந்தவிடம் வாக்குமூலம்

07 ஆம் பக்கம் பார்க்க


# நெருக்கடியிலிருந்து மீண்டெழுவது கடினம்

## பிரதமர் ரணிலுடனான சந்திப்பில் கைவிரித்தது மத்திய வங்கி



*(கொழும்பு) சர்வதேச நாணய நிதியம் உதவாதவரை இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. நாடு மீண்டெழுவது கடினம் என பிரதமர் ரணிலிடம் மத்திய வங்கியினர் தெரிவித்துள்ளனர்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு
## அனைத்து ஆதரவையும் இந்தியா வழங்கும்
சென்னையில் பிரதமர் மோடி



(கொழும்பு)
இலங்கைக்கு இந்தியா அனைத்துவித ▷15

இடைக்கால பாதீட்டில்
## அரச ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு
பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வைக் கொண்டுவர பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.
வாழ்க்கைச்செலவு ▷15

## வவுனியாவில் புதிய புத்தர்
தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியில் பிரதிஷ்டை

(வவுனியா)
வவுனியா நகரில் உள்ள இலுப்பையடிப் பகுதியில் புத்தர் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.
வவுனியா, இலுப்பையடிப் பகுதியானது தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் பகுதியாகவுள்ளதுடன், தமிழ் பேசும் மக்களின் வர்த்தக நிலையங்களும் அதிகமாகவுள்ளன.
இப் பகுதியில் மரம் ▷15



## கடன் மறுசீரமைப்பின் பின் இலங்கைக்கு உதவுவோம்
சர்வதேச நாணய நிதியம்



(கொழும்பு)
கடன் மறுசீரமைப்பின் பின்னர் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவோம் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியோவா தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ▷15

யாழில் பங்கீட்டு முறையில்
## எரிவாயுவை விநியோகிக்க முகவர்கள் முட்டுக்கட்டை
இராணுவ உதவியை நாட ஆலோசனை

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் சமையல் எரிவாயுவை பொதுமக்களுக்கு விநியோகிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.
மாவட்டத்தில் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு விநியோகிக்க மாவட்ட ▷15

## போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லம் நோக்கி செல்ல முயன்றதால் பதற்றம்



(கொழும்பு)
பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கோரி அலரிமாளிகைக்கு அருகில் No Deal Gama இல் உள்ள போராட்டக்காரர்கள், பிரதமரின் இல்லத்திற்கு நேற்று செல்ல முயற்சித்தனர்.
எனினும், பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்"

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11630)

076 825 7716 (ஆகாஸ்)

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- பகல், இரவுக் கடமை
- ஆண்கள்

யாழ். நகரை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை.

076 097 3121 (இ)

# ஜனாதிபதியும் தற்போதைய அரசும் இராஜினாமா செய்ய வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியும் அரசாங்கமும் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல' இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் இலங்கை மீது நம்பிக்கை இல்லை என்று கூறிய அவர், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# சிறுநீரக, புற்றுநோய் நோயாளிகளுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(கொழும்பு)

சிறுநீரகம் மற்றும் புற்றுநோய் நோயாளிகளுக்கு தேவையான பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அந்த ஒன்றியத்தின் தலைவர் அஜித் திலகரத்ன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தற்போது இவ்வாறான நோயாளர்கள் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை நாகம்மா
( ஓய்வுபெற்ற நெசவு அதிபர் )

பண்பின் உறைவிடமாய் பாசமிகு தாயாக
எண்ணற்ற தர்மம் நாளும் புரிந்தே
கண்ணியமாய் உழைத்து குடும்பத்தை காத்த
புண்ணியவதி அம்மா எங்கு சென்றனையோ?
எண்ணமெலாம் நிறைந்தே ஏங்கித் தவிக்கின்றோம்
மணமகிழ உறவினரை அணைத்த தாயே
விண்ணவரும் போற்ற தூய்மையாக நின்றீரே!
அண்ணலவன் திருத்தாளில் அடைக சாந்தி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 21.03.1938
விண்ணில் 27.04.2022

இல. 76/1, யமுனா வீதி,
நல்லூர். (11627)
குடும்பத்தினர்

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது குடும்ப நண்பன்
திரு. மாசிலாமணி சுகந்தன்
(உரிமையாளர் - KMAS Engineering Contractors)

நேற்றைய தினம் (26.05.2022)
மாகாண மேல் நீதிமன்ற
நீதிபதி முன்னிலையில் அகில
இலங்கை சமாதான நீதவானாக
சத்தியப்பிரமாணம் செய்து
கொண்டமையை பெருமையுடன்
வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர் : கணேஸ்பரன் குடும்பம்
மானிப்பாய்
(C-4376)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சபாரத்தினம் சர்வானந்தம்

கணப்பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டகல்வீரென
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத்தின்
துடிப்பைப் போல உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் – நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்...
எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

தோற்றம் : 04.08.1945
மறைவு : 19.05.2020


ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (11631)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான நெருக்கடி நிலை ஆரம்பம்
# இரண்டு மாதங்களுக்கு தேவையான அரிசியே கையிருப்பில் உள்ளது
## விவசாய சம்மேளனம் எச்சரிக்கை

(கொழும்பு)

**அடுத்த இரண்டு மாதங்களில் நாட்டின் அரிசி கையிருப்பு முழுமையாக குறையும் என அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**



சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரிசி இருப்பு ஏற்கனவே வேகமாக குறைந்து வருகிறது.

குறிப்பாக நாட்டிற்கு வருடாந்தம் 3.7 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பெரும் போகத்தில் 1.5 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உர நெருக்கடியின் போது சிறுபோகத்தில் நெல் உற்பத்தி செய்வது கனவாகவே உள்ளது எனவும் கருணாரத்ன தெரிவித்தார்.

அதன்படி, ஆண்டு முழுவதும் 3.7 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் அறுவடைக்கு பதிலாக குறைந்தது 2 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் முடிக்கப்படவில்லை என்பது பாரிய பிரச்சினையாகும்.

நாட்டில் டொலர் பற்றாக்குறை உணவு நுகர்வை முற்றாக பாதிக்கும் போது நாட்டின் மோசமான நெருக்கடி ஆரம்பிக்கும்.

உரம் வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும், யாழ் பருவத்திற்கு தேவையான உரத்தை இதுவரை அரசாங்கம் வழங்காததால் உணவுப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

"ஜூன் மாதத்திற்கு பிறகு குழந்தைகள் உணவின்றி ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு ஆளாகின்றனர்" என்று விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது குளங்கள், அணைக்கட்டுகள், நெற்செய்கைகள் போன்றவற்றில் நீர் நிரம்பியுள்ள போதிலும் 45 வீதமான நெற்செய்கையே யாழ் பருவத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி-6)

# பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவோரின் கொடுப்பனவு உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும்
## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை கடமைகளில் ஈடுபடும் பணிக்குழாமினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பணிக்குழாமினருக்கு வழங்கப்படும் குறைந்தளவான கொடுப்பனவை ஏற்றுக்கொள்ள முடியாது.

எரிபொருள் விலையேற்றம் பாரிய சுமையினை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வழங்குவதற்கு தீர்மானித்துள்ள கொடுப்பனவில் உடனடியாக திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேநேரம், பரீட்சை நிறைவுறும் வரையில் எரிபொருள் விலையை அதிகரிக்காதிருப்பதுடன், பரீட்சார்த்திகள் மற்றும் பணிக்குழாமினருக்கு எரிபொருள் தடையின்றி கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (நி-6)

# அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்களை மீள அழைக்கும் நடவடிக்கை நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் அவர்களின் சம்பளம் குறைக்கப்படாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வளப்பற்றாக்குறை காரணமாக அரச செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் அரச நிறுவனங்களின் ஊழியர்களை அழைப்பதற்கு தடை விதிக்கும் சுற்றறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

அத்துடன் அத்தியாவசிய சேவைகள் வழமை போன்று நடைபெறுவதாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன தெரிவித்துள்ளார். (நி-6)

# மக்கள் விரும்பினால் மீண்டும் வருவாராம்



(கொழும்பு)

மக்கள் கோரிக்கை விடுத்தால், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வருவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார்.

எனினும், மக்கள் அவரை மீள அழைத்தனர். அவரும் வந்து, ஆட்சியை பிடித்தார். எனவே, மக்கள் கோரினால் அவர் மீண்டும் வருவார் என டீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இணைந்து பயணிப்பது தான் சிறப்பு எனவும் ஹேரத் தெரிவித்துள்ளார். (நி-6)

# லாப் சமையல் எரிவாயு மீண்டும் விநியோகம்




(கொழும்பு)

6 நாட்களுக்குள் லாப் சமையல் எரிவாயு சிலிண்டர் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுமென லாப் காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.


தமது நிறுவனத்தால் வங்கிக் கடனுறுதிக் கடிதத்தை தற்போது பெற முடிந்துள்ளதால், சந்தைக்கு எரிவாயு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக லாப் காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல நாட்களாக லாப் காஸ் நிறுவனம் சமையல் எரிவாயு விநியோகத்தை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சுகாதாரத்துறையில் அவசரகால நிலை பிரகடனம்

(கொழும்பு)

சுகாதார சேவையில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க.



தற்போது சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள அவசர நிலை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையை போக்க மருந்துகளை இறக்குமதி செய்யும் திட்டத்தை சுகாதார அமைச்சு தயாரிக்கவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எப்படியிப்பினும் இதற்கு முன்னர் விண்ணப்பம் செய்யப்பட்ட மருந்துகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் கிடைத்துவிடும் என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது )

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய நான் 2021.07.01ஆம் திகதி 2234/39 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் சகல பிரதேச மன்றங்களுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அமைப்பதற்கு அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

❖ இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

❖ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் நான்கிலொரு ¼ பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

❖ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

❖ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படி தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற் கொள்ளுவார்.

❖ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

❖ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### ❖ கிளை பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம் (29.05.2022 - ஞாயிற்றுக்கிழமை)

| இல | கிளை பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | புலோலி தெற்கு | 1 | திரு. அருளானந்தம் தயாளன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | கிளை கட்டடம் |
| 02 | புலோலி மேற்கு | 2 | திரு. கந்தையா கமலநாதன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | திருநாவலூர் சனசமூக நிலையம் |
| 03 | தம்பசிட்டி | 3 | திரு. வேதநாயகம் பிரதீஸ்குமரன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை மண்டபம் |
| 04 | குரும்பகட்டி | 5 | திரு. சிவசிதம்பரம் சிறிதரன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | சனசமூக நிலையம் (குரும்பகட்டி) |
| 05 | பெரியதேவனத்தாய் | 6 | திரு. அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | பெரியதேவனத்தாய் சனசமூக நிலையம் |
| 06 | புலோலி வடக்கு | 7 | செல்வி. சிவகுருநாதன் மாலினி | 29.05.2022 | மு.ப. 10 மணி | முதலியார் சனசமூக நிலையம் |
| 07 | வியாபாரிமூலை | 8 | திரு. நாகலிங்கம் குமணதாசன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | வியாபாரிமூலை பொதுநோக்கு மண்டபம் |
| 08 | வல்லிபுரக்குறிச்சி | 9 | திரு. கணேசராசா பரநிரூபன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | பொதுநோக்கு மண்டபம் (வல்லிபுரக்குறிச்சி) |
| 09 | அல்வாய் வடக்கு | 10 | திரு. குகேந்திரராசா வேணுகோபு | 29.05.2022 | மு.ப. 10 மணி | இளங்கோ பொதுநோக்கு மண்டபம் |
| 10 | புலோலி கிழக்கு மத்தி | 11 | திரு. சின்னத்துரை குணாளன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | புலோலி கிழக்கு சனசமூக நிலையம் |
| 11 | கற்கோவளம் | 12 | திரு. இரத்தினராசா கஜந்தன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | கற்கோவளம் பொதுமண்டபம் |
| 12 | புலோலி தென்மேற்கு | 13 | திரு. சண்முகநாதன் பாலகுமார் | 29.05.2022 | மு.ப. 10 மணி | கந்தமுருகேசனார் முன்பள்ளி மண்டபம் |
| 13 | புற்றளை | 23 | திரு. சண்முகநாதன் ரதிகுலன் | 29.05.2022 | மு.ப. 10 மணி | யா / புற்றளை மகா வித்தியாலயம் |

கூ. அ. உ. ஆணையாளர் பணிமனை, .
இல. 857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
06.05.2022

ஒப்பம் : **திரு. கிறகோரி சந்திரசேகரன்**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ். மாவட்டம்.

## கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்.
03. உடன் முன் சென்ற 03 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டவர் அல்லது 3 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனஞ்செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
05. இச் சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக் கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச் சங்கத்தில் வியாபாரி எனப் பதியப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட முறையில் வியாபாரத்தினை நடாத்துபவர்.
07. சங்கத்தின் ஆதாயம்தரும் ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி ஏதாவது தகைமைக்கொடையை பெறுபவர்.
08. இச் சங்கத்தில் அல்லது இச் சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராக இருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனவிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேரப்பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டு இருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் விட்டகல வேண்டிய நிலைக்குள் ஆளானவர்.
11. இயக்குனர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2)இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2.4அல்லது 2.6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
13. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் முழுமையடை யாதவருமான ஒருவர்.

**செயலாளர்**
**புலோலி, ப.நோ. கூ. சங்கம்**

**( சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 22 (1) )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-4378)

# வலுக்கும் அரசியல் நெருக்கடி பதவி விலகுகிறார் சவேந்திர சில்வா

## புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே





(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மே மாதம் 31 ஆம் திகதியுடன் இராணுவத் தளபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்யவுள்ளார் என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை, முப்படைகளின் பிரதானியாக ஜெனரல் சவேந்திர சில்வா உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஜூனில் கடன் கிடைக்கும்

## பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எதிர்வரும் ஜூன் மாதமளவில் கடனை பெற்றுக்கொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடக மொன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

தற்போது இலங்கை 4 வீத பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# அமெரிக்க தூதுவருடன் எரிசக்தி அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, எரிசக்தி துறையில் இலங்கை முன்னெடுக்கவுள்ள மாற்றுவழித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு, தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி-6)


# நினைவஞ்சலி

| 35ம் ஆண்டு | 23ம் ஆண்டு | 17ம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| திரு.அ.முத்துராஜா (முன்னாள் உப தபாலக அதிபர் தொண்டைமானாறு) | திரு.மு.பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) | திருமதி.பொ.இராசமணி |
| தோற்றம்: 03.04.1930 | தோற்றம்: 25.12.1914 | தோற்றம்: 23.07.1916 |
| மறைவு: 27.05.1987 | மறைவு: 02.01.1998 | மறைவு: 26.02.2005 |

வடமராட்சியின் அனர்த்தத்தில் உம் இன்னுயிர் கவர்ந்த கூற்றுவன்
உம்மை மட்டுமல்ல இன்னோரன்ன பல உயிர்களை பழி எடுத்தமையினை
எம்மால் மறக்க முடியவில்லையே உம்முடன் சேர்ந்து சகல ஆத்மாக்களும்
சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

முத்துவாசா,
கெருடாவில், தொண்டைமானாறு. (C-4374) குடும்பத்தினர்.


# இராசிபலன்

27.05.2022
வைகாசி 13, வெள்ளிக்கிழமை
துவாதசி பிற்பகல் 2.08 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 4.14 மணிவரை
சுபநேரம் -5.52-7.22 மணிவரை
இராகுகாலம் -10.22-11.52 மணிவரை

பிரதோச விரதம்,
அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்- உத்தரம்

வளவன்



**மேஷம்** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, . பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.



**ரிஷபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுப விரயங்கள் ஏற்படலாம்,பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மிதுனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.



**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.



**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம்,கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.



**துலாம்** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.



**விருச்சிகம்** மனக்குழப்பங்கள் அகலும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.



**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், பிள்ளைகளின் நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும். நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.



**கும்பம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும்.



**மீனம்** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

உணர்ச்சி மட்டுமே தன்னை விஞ்சச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் பெற்று தரக்கோரி முல்லைத்தீவு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

## மாவட்ட செயலரிடம் மகஜரும் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எரிபொருளை பெற்றுத்தரக்கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்தனர்.**




மண்ணெண்ணைய் இல்லாத நிலையினால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாமையினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணையினை பெற்றுத்தரக்கோரி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலகம் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்றடைந்து மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணையினை பெற்றுத்தரக்கோரி கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் ஆர்ப்பாட்டக்காரர்களை உள்ளே அழைத்து கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஏற்றுக்கொண்டார்.

குறித்த போராட்டத்தை மீனவர்கள் ஆரம்பித்த போது சம்பவ இடத்துக்கு வருகைதந்த இராணுவத்தினர் மண்ணெண்ணெய் பெற்றுத்தருவதாக மீனவர்களுடன் கலந்துரையாடி போராட்டத்தை நிறுத்த முயற்சித்திருந்தனர் இருப்பினும் மீனவர்கள் இந்த விடயத்துக்கு உடன்படாமல் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-281)



## கசிப்புடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 30 வயதான நபர் ஒருவரை 20 லீற்றர் கசிப்புடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்திருந்தனர்.

கைதான நபரை நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே அவரை எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-30)

## நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் நூலகர் அமரர்.ரோகினி பரராஜசிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று 27 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா மற்றும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூலக துறை சார்ந்தவர்களையும் சமூக ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக நூலக சமூகம் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-6)

## ஆலய உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை தெற்குப் பகுதியில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை வேளையில் உண்டியல் உடைத்து பணம் திருடப்பட்டுள்ளது.

ஆலய உண்டியலில் சுமார் 25 ஆயிரம் ரூபாய் வரை இருந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டு சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## உணவு நெருக்கடியை எதிர்கொள்ளல் தொடர்பில் கலந்துரையாடல்

(குப்பிழான்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் "உணவு நெருக்கடியை எதிர்கொள்ளல்" எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கே.கே.எஸ்.வீதி கொக்குவில் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொறியியலாளர் என்.தில்லைநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரும், வடமாகாண முன்னாள் உலக வங்கியின் விவசாய விரிவாக்கத் திட்ட ஆலோசகருமான க.பத்மநாதன் பிரதான கருத்துரையை ஆற்றுவார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய துறைசார்ந்த வல்லுநர்களின் கருத்துரைகளும் திறந்த கலந்துரையாடலும் நடைபெறும். (4-6-18)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப 9 இற்கு மூத்தவிநாயகர் சனசமூக நிலையம், மு.ப 11 இற்கு ஆசீர்வாதப்பர் வீதி சுகாதார கல்வி மையம், பி.ப 2.30 இற்கு நாயன்மார் வீதி சுகாதார கல்வி மையம், 7 ஆம் திகதி மு.ப 9 இற்கு யாக்கோவா பாலர் பாடசாலை, மு.ப 11 இற்கு வெயிலுகந்த பிள்ளையார் கோவில் செம்மணி வீதி, பி.ப 2.30 இற்கு கடுக்காய் வீதி, 8 ஆம் திகதி மு.ப 9 இற்கு நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி, மு.ப 11 இற்கு பருத்தித்துறை வீதி உயர்கல்லூரி அருகாமை, மு.ப 2.30 இற்கு அரசடி ஜனசக்தி சனசமூக நிலையம், 9 ஆம் திகதி மு.ப 9 இற்கு பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம், மு.ப 11 இற்கு சிவன் புது வீதி, பி.ப 2.30 இற்கு மணல்தரை லேன், 10 ஆம் திகதி மு.ப 9 இற்கு ஜமுனா வீதி கல்வி நிலையம் மையம், மு.ப 11 இற்கு சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி, பி.ப 2.30 இற்கு செட்டியார் தோட்டம், 13 ஆம் திகதி மு.ப 9 இற்கு வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமை, மு.ப 11 இற்கு அம்மன் வீதி, பி.ப 2.30 இற்கு முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி, 15 ஆம் திகதி மு.ப 9 இற்கு சங்கிலியன் வீதி, மு.ப 11 இற்கு கொண்டலடிச்சந்தி, பி.ப 2.30 இற்கு கோவில் வீதி பண்டாரக்குளம், 16 ஆம் திகதி மு.ப 9 இற்கு செட்டித்தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம், மு.ப 11 இற்கு நல்லூர் குறுக்குத்தெரு சந்தி, பி.ப 2.30 இற்கு கைலாயப் பிள்ளையார் கோவிலடி கோயில் வீதி, 17 ஆம் திகதி மு.ப 9 இற்கு துர்க்கா மணி மண்டபத்தடி கோவில் வீதி, மு.ப 11 இற்கு பண்டாரக்குளம் இந்து மாமன்றம், பி.ப 2.30 இற்கு கொண்டலடி குமார வீதி ஆகிய இடங்களில் ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஒரு நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் என யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4-6)

## யாழில் மஞ்சள் செய்கையில் தயக்கமின்றி ஈடுபடுங்கள்

### விவசாய அமைச்சின் செயலாளர்

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் மஞ்சள் பயிர்ச் செய்கை மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது.



எனவே, வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் மஞ்சள் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் எந்தவித தயக்கமுமின்றி ஈடுபட முடியும் என வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இலங்கையில் இறக்குமதி சம்பந்தப்பட்ட தடைகள், கட்டுப்பாடுகள் காரணமாக மஞ்சள் மற்றும் மஞ்சள் சார்ந்த ஏனைய இறக்குமதி விவசாயப் பொருட்கள் தட்டுப்பாடான நிலையில் மக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு இவ்வாறான பொருட்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, விவசாயிகள் உரிய ஆலோசனைகளை எங்கள் விவசாயப் போதனாசிரியர்களிடம் பெற முடியும். முற்றுமுழுதாக சேதனப் பசளை மற்றும் சேதனப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி மஞ்சள் செய்கையில் விவசாயிகள் தாராளமாக ஈடுபட்டுப் பயன் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதமாகும் சிறுபோக பயிர்ச்செய்கை

## உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும்

### நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும் என்று நீர்ப்பாசனத் திணைக் களத்தின் நீர்முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் டி.அபேசிறிவர்தன அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"சிறுபோகத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் தாமதமாகியுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் செய்கை நடவடிக்கைகள் நிறைவுபெறாவிடின், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும்.

தற்போது நெற்செய்கையைச் செய்ய முடியாது போனால் மாற்றுப் பயிர்களை விவசாயிகள் பயிரிட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# முன்னாள் பிரதமர் மகிந்தவிடம் வாக்குமூலம் பதிவு


(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள இடத்திற்கு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சென்று வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது கடந்த 9 ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பிலேயே முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-6)

# எரிபொருள் இல்லாததால் எரிவாயு கப்பல் தாமதம்



(கொழும்பு)

நேற்று இலங்கையை வந்தடையவிருந்த 3,500 மெட்ரிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பல், நாட்டுக்கு வருவதற்கு மேலும் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பலுக்கு இலங்கையில் எரிபொருளை வழங்க முடியாமையால், எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக அந்தக் கப்பல் இந்தியாவுக்கு சென்றுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, குறித்த எரிவாயு கப்பல் இலங்கையை வந்தடைய மேலும் இரண்டு நாட்களாகும். (நி-6)

# கடினமான சூழ்நிலையில் இலங்கைக்கு அவசரமாக உதவுங்கள்

## நட்பு நாடுகளிடம் கோட்டா வேண்டுகோள்



(கொழும்பு)

இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவையும் ஒற்றுமையையும் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நட்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், அத்தியாவசிய மருந்துகள், உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வது ஆகிய உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தில் உள்ள நட்பு நாடுகளின் உதவி அவசரமாகத் தேவைப்படுகிறது என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் டோக்கியோவில் நேற்று நடைபெற்ற ஆசியாவின் எதிர்காலம் 27 ஆவது சர்வதேச மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடு இலங்கை. நமது தற்போதைய தேசிய நெருக்கடிக்கான தீர்வுகள் நமது தேசத்தின் ஜனநாயக கட்டமைப்பின் மூலம் ஆதரிக்கப்படுவது மிகவும் முக்கியமானது.

புதிய பிரதமரையும் அமைச்சரவையையும் நியமித்துள்ளோம். மேலும் தேசிய ஒருமித்த கருத்தை உருவாக்குவது தொடர்பாக பாராளுமன்றத்தில் தொடர்ந்து விவாதங்களை நடத்தி வருகிறோம்.

அத்தியாவசிய மருந்துகள், உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வது ஆகிய உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தில் உள்ள நண்பர்களின் உதவி அவசரமாகத் தேவைப்படுகிறது

ஜப்பான் இலங்கையின் முக்கிய அபிவிருத்தி பங்காளிகளில் ஒன்றாக உள்ளதுடன், ஜப்பானிடம் இருந்து நிதியை இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் முடிவடையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த கடினமான நேரத்தில் நமது நாட்டிற்கு ஆதரவையும் ஒற்றுமையையும் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு இலங்கையின் மற்ற நட்பு நாடுகளையும் வேண்டுகோள் விடுக்கிறேன் எனக் குறிப்பிட்டார். (நி-6)


## யோக சுவாமிகளின் 150 ஆவது ஜெனன தின பூசை வழிபாடு

**காலம்: 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி**

**இடம்: யோக சுவாமிகள் சமாதிக் கோயில், கொழும்புத்துறை.**

யோக சுவாமிகளின் 150 ஆவது ஜெனன தின பூசை சுவாமிகள் வாழ்ந்து சமாதி கூடிய கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் சுவாமிகளின் அணுக்கத் தொண்டர் ஒருவர் சுவாமிகளின் வாழ்வு பற்றியும், சுவாமிகளுடன் தனது நேரடி அனுபவங்கள் பற்றியும் எழுதிய நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

அடியவர்கள் இப்பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு குருவருளையும் திருவருளையும் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிர்வாகம்**

**யோக சுவாமிகள் சமாதிக் கோயில், கொழும்புத்துறை.**

(11623)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:65 ¼ சூரி 9 செவ் 8 இல்
தகைமை/தொழில்:A/L மண் பரிசோதகர்
எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: B/9934

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: சூரி 2 செவ் 5 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L வியாபாரம் சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு:பட்டதாரி அல்லது உத்தியோகம்
தொ.இ: B/9950

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: சூரி 4 செவ் 7 இல்
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர்கள்
தொ.இ: B/9942

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : பூரட்டாதி 1
கி.பா: சூரி 6 செவ் 3 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc (Greenwich) , MSc(Pera) Senior Software Developer
எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவபோசனம் விரும்பத்தக்கது.
தொ.இ: B/9959

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: சூரி 12 செவ் 11 இல் உயரம்: 4'9"
தகைமை/தொழில்: MSc .Bio informatics, MSc Yoga (India) Yoga Instructor, Fitness Trainee
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ:G/9922

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 2
கி.பா:91 சூரி 12 செவ் 8 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில்: A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: G/9924

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 31 சூரி 4 செவ் 7 இல்
உயரம் : 5'9"
தகைமை/தொழில்: BSc, MSc (Pera) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச,தனியார் தொழில்
தொ.இ:G/9958

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா:சூரி 11 செவ் 7 இல் உயரம்:5'1"
தகைமை/தொழில்:Biology Computer Science(America) Data & Analytics Consultant -America
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/9976

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 56

# சமயோசிதமாக சிந்திக்க வேண்டும்



ஒரு ரயில் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அப்போது ரயில் ஜன்னல் வழியே 'குபுகுபு' வென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. பெட்டியில் இருந்த பயணிகள் அனைவரும் காற்றின் ஜிலுஜிலுப்பை நன்றாக அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்தப் பெட்டியில் ஜன்னல் ஓரமாக இருந்த ஒருவர் சந்தோசத்தில் ஜன்னலுக்கு வெளியே தன் கையை நீட்டி ஆட்டி அசைத்து மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவர் கையில் அணிந்திருந்த விலை உயர்ந்த கைக்கடிகாரம் திடீரென கழன்று கீழே விழுந்துவிட்டது.

பதறிப்போன அந்த மனிதர் தன் கைக்கடிகாரம் கீழே விழுந்து விட்டதாகக் கூச்சல் போட்டுக் கத்தினார்.

இதனையடுத்து அந்தப் பெட்டியில் இருந்த சகப் பயணிகள் அனைவரும் பதற்றத்தோடு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். சிலர் ஜன்னல் வழியே கைக்கடிகாரம் தெரிகிறதா என்று பார்த்தனர். சிலர் எமர்ஜென்சி செயினைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தலாம் என்று யோசனை செய்தனர்.

இவ்வாறு அந்தப் பெட்டி முழுவதுமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தபோது, கைக்கடிகாரத்தைத் தவற விட்டவருக்கு நேரெதிர் இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவர் மட்டும் எதனைப் பற்றியும் கவலைப்படாமல் ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தார். இதனைப் பார்த்தவர்கள் அவர் மீது கோபத்துடன் இருந்தனர்.

இதற்குள் அடுத்த ரயில் நிலையம் வந்துவிட்டது. இந்தப் பெட்டி அருகே நிறைய அதிகாரிகள் காத்திருந்தனர்.

இதனைப் பார்த்ததும் மற்றவர்கள் பரபரப்புடன் அந்த அதிகாரிகளிடம் கைக்கடிகாரம் தொலைந்து போனதைப் பற்றி கூறி, ஏதாவது உதவி செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நேரத்தில் அந்த எதிர் இருக்கையில் அமர்ந்திருந்தவரோ, அந்த அதிகாரிகளிடம் இங்கிருந்து இருபத்தைந்து கம்பங்களுக்குப் பின்னால் இவரது விலை உயர்ந்த கடிகாரம் விழுந்து விட்டது. அதனைக் கண்டுபிடித்து இவரிடம் சமர்ப்பித்து விடுங்கள்" என்றார்.

நீதி : பரபரப்பான சூழலில் பதற்றப்படாமல் சமயோசிதமாகச் சிந்தித்து நடந்து கொள்ளவேண்டும்

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# பொருளாதார தடைகள் நீக்கப்பட்டால் உணவுக் கப்பல்களை அனுமதிக்கலாம்

(மொஸ்கோ)

பொருளாதார தடைகள் நீக்கப்பட்டால் மாத்திரமே முடக்கப்பட்டுள்ள துறைமுகங்களில் இருந்து உணவை எடுத்து செல்லும் கப்பல்களை அனுமதிக்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைன் ஒரு பெரிய தானிய உற்பத்தி நிலையமாக உள்ளது.

இந்த நிலையில் பொருளாதார தடைகள் நீக்கப்பட்டால் மாத்திரமே உக்ரைனின் முடக்கப்பட்டுள்ள துறைமுகங்களில் இருந்து கப்பல்களை அனுமதிக்கவுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

எனினும் ரஷ்யா உணவை ஆயுதமாக பயன்படுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்துடன் இந்த பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் பொருட்களின் விலை அதிகரிக்கக் கூடும் என பிரித்தானியா எச்சரித்துள்ளது. (நி-6)

# தெற்கு உக்ரைனில் உள்ளவர்களுக்கு ரஷ்யக் குடியுரிமை

(மொஸ்கோ)

தெற்கு உக்ரைன் நகரங்களான ஸபோரிஷியா, கெர்சன் நகர மக்கள் ரஷ்யக் குடியுரிமை பெறுவதற்கான நடைமுறையை எளிமையாக்குவதற்கான உத்தரவை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் பிறப்பித்தார்.

உக்ரைன் போரில் ரஷ்யாவிடம் வீழ்ந்த முதல் மற்றும் ஒரே பெரிய நகரம் கெர்சன் ஆகும். ஸபோரிஷியா நகரம் தற்போது உக்ரைன் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அதனைச் சுற்றியுள்ள ஏராளமான பகுதிகளை ரஷ்யப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஏற்கெனவே, கிழக்கு உக்ரைனில் தங்களது ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டொனட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ் பகுதிகளில் ஏராளமானவர்களுக்கு ரஷ்ய கடவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தாய...
# போர்ப்...
## பைடனின் எ...


(பீஜிங்)

**தாய்வானை ஆக்கிரமி... தலையிடும் என அமெ... பதிலடியாக தாய்வான் ... ஆரம்பித்துள்ளது.**

அமெரிக்க-தாய்வான் கூட்டு நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் ஒரு தீவிர எச்சரிக்கையாக இந்தப் போர்ப் பயிற்சி இடம்பெறுவதாக சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கிழக்கு பிராந்திய கட்டளைப் படையணியின் செய்தித் தொடர்பாளர் கேணல் ஷி யி நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

பயிற்சிகள் எங்கு நடத்தப்பட்டன? என்பதை அவர் குறிப்பாக சுட்டிக்

# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு 14 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இரு வேறு இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் காபூலில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில், அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் 22 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் உள்ள மசார்-இ-ஷெரீப் நகரத்தில் பேருந்து ஒன்றினை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.


குறித்த தாக்குதலில் 15 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இந்தத் தாக்குதல்களை இதுவரை எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ய்வான் அருகே
# ...ர்ப் பயிற்சியை ஆரம்பித்த சீனா
## ...ன் எச்சரிக்கைக்கு பதிலடி



**...ஆக்கிரமிக்க சீனா முயன்றால் அமெரிக்கா இராணுவ ரீதியாக ... அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் எச்சரிக்கைக்கு ...ய்வான் அருகே கடலில் பெரும் போர்ப் பயிற்சியை சீனா ...து.**

காட்டவில்லை. ஆனால் தாய்வானைச் சுற்றியுள்ள கடல் மற்றும் வான்வெளியில் போர் தயார் நிலை ரோந்துகள் மற்றும் போர்ப் பயிற்சிகளை சீன இராணுவம் முன்னெடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுடன் அண்மையில் கூட்டாக டோக்கியோவில் செய்தியாளர்களை பைடன் சந்தித்தார். இதன்போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது போன்று தாய்வான் மீது சீனா படையெடுத்தால் அமெரிக்கா தாய்வானுக்கு உதவுமா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா இராணுவ நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடவில்லை. இந்நிலையில் தாய்வான் மீது சீனா படையெடுத்தால் தாய்வானை பாதுகாக்க நேரடி இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபடுமா? எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு ஆம் என பைடன் பதிலளித்தார். ஒரே சீனா என்ற கொள்கையுடன் நாங்கள் உடன்படுகிறோம். நாங்கள் அதில் கையெழுத்திட்டோம். ஆனால் தாய்வானை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்தால் இந்த ஒப்பந்தம் வலுவாக இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு போரைத் தொடங்கிய பின்னர் தாய்வானை பாதுகாக்கும் தேவை இன்றும் அதிகமாக உள்ளது எனவும் பைடன் குறிப்பிட்டார்.

இவ்வாறான பைடனின் கருத்தே சீனாவை ஆத்திரமூட்டியுள்ளது.

இதேவேளை, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போர் இடம்பெற்று வரும் நிலையில் தாய்வானுக்கு எதிராக சீனா விரைவில் ஒரு ஊடுருவலைத் தொடங்கலாம் என்ற கவலையைத் தூண்டியுள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடன் தனது ஆசிய பயணத்தை முடித்துக் கொண்ட நிலையில் சீனா ரஷ்யா இணைந்து கூட்டு இராணுவ பயிற்சியில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இராணுவத்தில் இணைவதற்கான வயது வரம்பை தளர்த்தியது ரஷ்யா

(மொஸ்கோ)

இராணுவத்தில் இணையும் தொழில்முறை வீரர்களுக்கான வயது வரம்பை ரஷ்யா ரத்து செய்துள்ளது. ரஷ்ய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இதற்கான சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதுவரை ரஷ்ய இராணுவத்தில் இணைவதற்கான உச்ச வயது வரம்பு 40 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் அது நீக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் ஆட்சேர்ப்பை அதிகரிப் பதற்கான ஒரு வழியாக இந்த முடிவு பார்க்கப்படு கிறது.

தேவைக்கு ஏற்ற, சிறப்பு தகுதி மற்றும் திறன் உள்ளவர்களை பணியமர்த்துவதை எளிதாக்கும் வகை யில் உச்ச வயதெல்லையை நீக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் 18-27 வயதுடைய அனைத்து ஆண்களும், ஒரு வருட கட்டாய இராணுவ சேவையில் ஈடு பட வேண்டும் என்ற நடைமுறை உள்ளது.

ஆனால், பலர் பல காரணங்களை சுட்டிக்காட்டி இராணுவ சேவைக்குச் செல்ல மறுக்கின்றனர். உரிய காரணங்களை சுட்டிக்காட்டுவோருக்கு கட்டாய இராணுவ சேவையில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே இராணுவ சேவையில் குறிப்பாக தொழில்நுட்பம், மருந்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் அதிகளவானவர்களை உள்ளீர்க்கும் வகையில் இராணுவத்தில் சேருவதற்கான உச்ச வயது வரம்பை ரஷ்யா தளர்த்தியுள்ளது. (நி-6)

## அமெரிக்க பாடசாலையில் நடந்த படுகொலை; முன்னரே முகநூலில் பதிவிட்ட கொலையாளி

(வோஷிங்டன்)

அமெரிக்கா -தெற்கு டெக்சாஸில் உள்ள ஒரு ஆரம்ப பாடசாலைக்குள் புகுந்த ஆயுததாரி ஒருவர் 18 பாடசாலை சிறுவர்கள், 2 ஆசிரியர் உட்பட 21 பேரை கொடூரமாக சுட்டுக் கொல்வதற்கு முன்னர் இது குறித்து பேஸ்புக்கில் பதிவிட்டு எச்சரித்துள்ளார்.



நேற்று முன்தினம் வகுப்பறை ஒன்றுக்குள் புகுந்த 18 வயதான கொலையாளி, வகுப்பறை வாயில் கதவை மூடிவிட்டு அங்கிருந்த 18 சிறுவர்களையும் இரண்டு ஆசிரியர்களையும் சுட்டுக் கொன்றார். இதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் பாடசாலைக்குள் புகுந்து அனைவரையும் சுட்டுக் கொல்லப் போகிறேன் என கொலையாளி பேஸ்புக்கில் பதிவிட்டதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

பாடசாலைக்குள் புகுந்து 20 பேரைக் சுட்டுக் கொல்ல முன்னர் "நான் என் பாட்டியை சுடப் போகிறேன்" எனவும் சிறிது நேரம் கழித்து "நான் என் பாட்டியை சுட்டுக் கொன்றுவிட்டேன்" எனவும் கொலையாளி பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார்.

தனது பாட்டியை சுட்டுக் கொன்ற பின்னரே கொலையாளி உவால்டேவில் உள்ள ராப் தொடக்கப் பள்ளி நோக்கி காரில் சென்றார். பாடசாலை அருகே காரை மோதி நிறுத்தி விட்டு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவர் வகுப்பறைக்குள் நுழைந்துள்ளார் எனவும் டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபோட் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுப் பஞ்சத்தை தடுப்பதற்கு மரவள்ளி செய்கையில் ஈடுபடுங்கள்

## பூநகரி பிரதேச சபை தவிசாளர்

(அக்கராயன்)

**உணவு பஞ்சத்தை இயன்றளவு குறைப்பதற்காக மரவள்ளி செய்கையில் பொது மக்கள் கூடுதலாக ஈடுபட வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கடந்த 24 ஆம் திகதி பூநகரி செம்பன்குன்று சனசமூக நிலைய பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் தலைமை யுரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த போர்ச் சூழலின் போது பொருளாதார நெருக்கடிகள் ஏற் பட்ட போது வீட்டுத் தோட்டம் ஏனைய பயிர்ச் செய்கை முயற்சி களில் கூடுதலாக மரவள்ளி பயிர்ச் செய்கை மக்களின் பசி யினை போக்குகின்ற ஒரு பயிர்ச் செய்கையாக காணப்பட்டது.

தற்போது நாட்டில் பொருளா தார நெருக்கடி வறுமை அதி கரித்துள்ள நிலையில் மக் கள் கூடுதலாக மரவள்ளி செய் கையில் ஈடுபட்டால் வறுமை யில் இருந்து தற்பாதுகாத்துக் கொள்வதற்கு உதவியாக இருக் கும் என தெரிவித்தார். (4-6-350)

## சிறப்புப் பொங்கலும் பூசை வழிபாடுகளும்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவரும், பிரபல சைவத்தமிழ்ச் சொற் பொழிவாளருமான செஞ் சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 61 ஆவது பிறந்த நாளை முன் னிட்டுக் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை சிறப்புப் பொங் கலும் பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு ஆச் சிரம முன்றலில் சிறப்புப் பொங்கல் வழிபாடுகள் இடம் பெற்று அதனைத் தொடர் ந்து காலை 8 மணிக்குப் பொங்கல் வழிபாடுகளும் இடம்பெறும். (4-6-18)

# மாட்டுடன் மோதியதில் ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு பகுதி யில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் வீதியில் நின்ற மாடுடன் மோதியதில் படுகாயமடைந் துள்ளார்.

காயமடைந்த குறித்த நபரை சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவ ட்ட மருத்துவமனைக்கு அனும திக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ் விபத்தில் காயமடைந் தவர் புன்னை நீராவி பகுதியை சேர்ந்தவர் ஆவார். இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-316)

# தமிழக நன்கொடை உதவித்திட்டம்; முல்லையில் 15,857 குடும்பங்கள் தெரிவு

(பனிக்கன்குளம்)

இந்தியாவின் தமிழ் நாட்டு அரசினால் இலங்கை மக்களு க்கு நன்கொடையாக வழங் கப்பட்டுள்ள நிவாரணப் பொருட் கள் இலங்கையில் வறுமையில் வாடும் மக்களுக்கு பகிர்ந்தளி க்கும் நடவடிக்கையில் அரசா ங்கம் ஈடுபட்டுள்ளது.

அதனடிப்படையில் முல்லை த்தீவு மாவட்டத்திற்கு 15, 857 குடும்பங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 3, 964 குடும்பங்களுக்கு பால்மா பைக்க ற்றுக்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

குறித்த நன்கொடை உதவித் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோகிராம் அரிசி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் முதற்கட்டமாக ஒரு குடும்பத்தி ற்கு பத்து கிலோகிராம் அரிசி வழங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டத்தில் மிகுதி வழங்கப்பட வுள்ளது.

ஒரு கிலோகிராம் நிறையு டைய பால்மா பைக்கற்றுக்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் கர்ப்பிணி பெண் கள் அல்லது பாலூட்டும் தாய் மார்கள் அல்லது 5 அகவைக்கு உட்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட வுள்ளது. (4-6-281)

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படாவிட்டால் இளைஞர்களின் வாழ்வு பறிபோகும் ஆபத்து

(வவுனியா)

21 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக உரையாடப்படு கின்ற போது பயங்கரவாத தடைச்சட் டம் திருத்தம் நீக்கம் தொடர்பான விடய மும் உள்ளடக்கப்பட வேண் டும். இல்லையேல் இளை ஞர்களின் வாழ்வு பறிக்கப் படும் ஆபத்தே உள்ளது என அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியி ட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் 13 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று முன்தினம் விடு தலை செய்யப்பட்டுள்ளார்.

சித்திரவதையைத் தொட ர்ந்து புரியாத மொழியில் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே 21 வயதே நிரம்பிய கேதீஸ்வர னின் 13 வருடங்களை சிறை யில் கழிக்க வைத்துள்ளது. இத ற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட் டம் தமிழர்களுக்கு எதிராக பாவி க்கப்பட்டுள்ளது என்பத ற்கும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தகைய வாழ்வு கொடு மைகளுக்கு முகம் கொடுக்கி றார்கள் என்பதற்கு கேதீஸ் வரனின் வழக்கு தீர்ப்பு இன்னும் ஒரு உதாரண மாகும்.


அரசியல் யாப்பின் 21 ஆவது திருத்தச்சட்டம் தொடர் பாக உரையாடப்படுகின்ற இக் காலகட்டத்தில் பயங்க ரவாத தடைச்சட்டம் திருத்த நீக்கம் தொடர்பான விடய மும் உள்ளடக்கப்பட வேண் டும்.

இல்லையேல் தற்போதைய அரசியல் பொருளாதார கொந் தளிப்பான சூழ்நிலையில் கேதீஸ்வரன் போன்ற இளை ஞர்களின் வாழ்வு பறிக்கப் படும் ஆபத்தே உள்ளது என தெரிவித்தார். (4-6-299)



யாழ்.மாவட்டச் செயலகத்தின் இரண்டாம் காலாண் டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

# இரத்ததான முகாம்



(குப்பிழான்)

உதயசூரியன் விளையாட் டுக் கழக முன்னாள் அணித் தலைவர் அமரர். இ.அஜந்தின் ஆறாம் ஆண்டு ஞாபகார்த்தமாக உதயசூரியன் விளை யாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த இரத்த தான முகாம் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை குரும்பைகட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## சான்றுப் பொருளை பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு இல க்கம் 37245 (B/1635/19) உடைய மோட்டார் சைக்கி ளின் உரிமையாளர் யாரா வது இருந்தால் தகுந்த ஆதா ரத்தைக் காட்டி பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத பட்சத் தில் 2 மாதங்களின் பின் முன்னறிவித்தல் ஏதுமின்றி பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள் ளார். (4-6)

## நெல்லியடி பேருந்து நிலையத்தில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(கரணவாய்)

நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த 2 சைக்கிள்கள் நேற்று முன்தினம் திருடப்பட்டு ள்ளன. குறித்த பகுதியில் இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட சைக்கிள் உரி மையாளர்கள் பெரும்பாலும் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்வதில்லை.

அத்துடன் குறித்த பகுதியில் காணப்பட்ட சி.சி.ரி.வி கமராவும் பழுதடைந்து விட்டது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர் கள் தொடர்ந்து அதிகளவு திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அப்பகுதியில் ஒரு சி.சி. ரி.வி கமராவை பொருத்துமாறு அப் பகுதி மக்கள் கேட்டுக் கொண் டுள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைத்து வர்த்தகங்களும் முடங்கும் அபாயம்

## இலங்கை வர்த்தக மன்றம் எச்சரிக்கை

(கொழும்பு)

**தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து இனி தங்களது தொழிலை நடத்த முடியாது. அடுத்த மாதத்தில் அனைத்து வர்த்தகங்களும் வீழ்ச்சியடையும் அபாயத்தில் இருப்பதாகவும் இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றத்தின் தலைவர் டானியா அபயசுந்தர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இதுவரை காலமும் தங்களுடைய சேமிப்பில் தொழில்களை நடத்தி வந்ததாகவும் எனினும் தற்போது அதனை தொடர்வது மிகவும் கடினமாக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அதேவேளை அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சடிக்கப்படுவதாகவும், இதேவேளை தனியார் துறை ஊழியர்களுக்கு என்ன நடக்கும் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (நி-6)

# டொலரின் பெறுமதி



(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றின் நேற்றைய விற்பனைப் பெறுமதி 364 ரூபா 69 சதம் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

டொலர் ஒன்றின் கொள்முதல் 354 ரூபா 72 சதமாக பதிவாகியுள்ளது. (நி-6)

# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விற்பனையில் கடும் வீழ்ச்சி

## பேக்கரி உரிமையாளர்கள் கவலை

(கொழும்பு)

கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக சமீப நாட்களாக பேக்கரிஉற்பத்திப் பொருட்களின் விற்பனை குறைந்துள்ளது. இதனால் உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிவாயு நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால், அனைத்து உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது. இதனால் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. ஊழியர்களின் சம்பளம், கடை வாடகை, மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் செலுத்தும் போது தமக்கு வியாபாரத்தில் வருமானம் கிடைக்காததால் வியாபாரத்தை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உணவக உரிமையாளர்கள் தெரிவித்தனர். (நி-6)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரு மகன்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவமொன்று மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது.


மஹியங்கனை - ஹபரவெவ - கிரிமெடில்ல - தம்பராவ ஏரியில் நேற்று முன் தினம் நீராடச் சென்ற குறித்த மூவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 45 வயதான தந்தை, 15 மற்றும் 10 வயதுடைய இரண்டு பிள்ளைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நீராடச்சென்ற மூவரும் வீடு திரும்பாததையடுத்து, உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்த போது, அவர்களது ஆடைகள் குறித்த இடத்தில் காணப்பட்டுள்ளன.

இதையடுத்து பிரதேசவாசிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் குறித்த மூவரும் ஏரியில் இருந்து மீட்கப்பட்டு மஹியங்கனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டது. (நி-6)

# மத்திய வங்கி ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் எண்ணம் இல்லை

## இந்திரஜித் குமாரசுவாமி



(கொழும்பு)

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை அப்பதவியில் இருந்து நீக்கி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மீண்டும் நியமிக்கப்பட உள்ளதாக அண்மையில் சமூக வலைத்தளங்களிலும் பல்வேறு ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த, இந்திரஜித் குமாரசு வாமி, இந்த தகவல் முற்றிலும் பொய்யானது எனத் தெரிவித்தார். மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் எண்ணம் தனக்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றும் கலாநிதி நந்தலால் வீரசிங்க, அந்தப் பதவியை மிகச் சிறப்பாக நிர்வகிக்கும் திறமையானநபராவார்.

எனவே, இந்த நேரத்தில் அவருக்கு தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவது ஒரு தொழில் முறை மற்றும் குடிமகன் என்ற வகையில் எனது கடமையாகும். தற்போது அந்த கடமைகளை நானும் செய்து வருகிறேன் என அவர் தெரிவித்தார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 180 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 330 | 400 |
| தக்காளி | 800 | 350 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 130 | 120 |
| கோவா | 230 | 200 | 220 | 240 |
| கரட் | 180 | 300 | 330 | ,360 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 230 | 200 | 220 | 250 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 650 | 800 | 800 | 600 |
| வெண்டக்காய் | 160 | 200 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 240 | 160 |
| லீக்ஸ் | 200 | 220 | 230 | 250 |
| பீற்றூட் | 350 | 400 | — | 400 |
| கறிமிளகாய் | 400 | 650 | — | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 450 | 700 | — | 480 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | — | 300 |
| கீரை - 1 பிடி | 50 | 70 | 100 | 140 |
| தேசிக்காய் | 600 | 500 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | 550 | — | — |
| முள்ளங்கி | 120 | 200 | — | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 200 | — | — |

# கோ கம போராட்டக்காரர்களுக்கு வெளிநாடு செல்ல தடைவிதிப்பு



(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை வெளிநாட்டுப் பயணத் தடையை விதிக்கும் வகையில், காலிமுகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

மே 9 வன்முறையைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சிகளாகவும் முறைப்பாட்டாளர்களாகவும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையாகியுள்ளனர்.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் கோரிக்கையை அடுத்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் இதற்கான அறிவித்தல் [illegible] சட்டத்தரணி [illegible] தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## குமரனின் கனவு



(நேற்றைய தொடர்ச்சி)

சற்று நேரத்தில் இன்னும் பலர் குதிரைகளில் வந்து இறங்கி அந்த வீட்டிற்கு வந்தார்கள். எல்லோரும் ஒரிடத்தில் ஒன்று கூடினார்கள்.

அப்போது அவர்கள் தலைவன் போலத் தென்பட்டவன் "சரி. யார் யார் என்னென்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்? அவற்றை எடுத்து வையுங்கள்" என்றான்.

அப்போது கோட்டான் என்பவன் "தலைவா! இன்று எனக்கு ஒரு அதிசயச் சட்டை கிடைத்தது. அந்தச் சட்டையின் பைக்குள் கை விட்டால் கை நிறையத் தங்க நாணயங்கள் கிடைக்கும்" என்றான். அதைக் கேட்ட தலைவன் மகிழ்ந்து "பேஷ் அதைத் தனியாக வை. நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். சரி. குள்ளநரி! நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்? காட்டு பார்க்கலாம்" என்றான்.

அப்போது குள்ளநரி என்பவன் "தலைவா? இன்று எனக்கும் ஒரு அதிசயப் பொருள் கிடைத்தது. இது ஒரு படைத் தலைவனின் தலைப் பாகை. இதை தலையில் அணிந்து கொண்டு அம்புகள் எய்ய வேண்டும் என்று விரும்பினால் இதிலிருந்து மூன்று பக்கங்களிலும் அம்புகள் கிளம்பிச் செல்லும்" என்றான்.

தலைவனும் "ஓகோ! உனக்கும் ஒரு அதிசயப் பொருள் கிடைத்ததா? இதுவும் நமக்கு மிகவும் உதவும். இதையும் தனியாக எடுத்து வை. குண்டுக்கரடி இன்று நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்? எடுத்து வை" என்றான். மூன்றாவதாக குண்டுக்கரடி என்பவன் "தலைவா! இன்று எனக்கு ஒரு குத்துவாள் கிடைத்தது. நாம் போர் வீரர்கள் வேண்டும் என நினைத்து இந்தக் குத்துவாளைத் தரையில் ஒரு குத்து குத்தினால் நூறு வீரர்கள் தோன்றுவார்கள்" என்றான்.


அதை எல்லாம் கேட்ட அவர்களது தலைவன் "பேஷ்" அந்த மூன்று பொருட்களையும் அந்த மூலையில் வையுங்கள். தேவைப்பட்ட போது எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றான். அவர்களும் அந்த விசித்திரப் பொருட்களை மூலையில் வைத்தார்கள். திருடர்கள் எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் குமரன் சத்தமிடாமல் எழுந்து போய் மூலையில் வைக்கப்பட்ட மூன்று அதிசயப் பொருட்களையும் எடுத்துக் கொண்டான். பிறகு அங்கிருந்து அவன் அப்போதே கிளப்பி மாணிக்கபுரியை நோக்கி வேக வேகமாகச் சென்றான்.

கடைசியில் அவன் மாணிக்கபுரியை அடைந்து விட்டான். அரண்மனை வாசலுக்குப் போய் தான் மன்னனைக் காண வந்திருப்பதாக அங்கிருந்த காவலாளிகளிடம் கூறினான். அப்போது அவர்களது தலைவன் "யாரப்பா நீ? மன்னரைக் காண்பது எளிது என்றா நினைத்து விட்டாய்?" என்று கேட்டான். குமரனும் "என் பெயரைச்சொன்னால் உடனே உள்ளே போகச் சொல்வீர்கள். நான்தான் மாவீரன் குமர சிம்மன்" என்றான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




### இந்திரசித்தன் மாளிகை

அடுத்து, இந்திரசித்தின் அரண்மனையை அடைந்தான்; 'இவன் இந்திரனைச் சிறையிட்டவன்' என்பதை முன்பே கேட்டு அறிந்திருக்கிறான்; அரக்கர் குலத்தில் அழகு உடைய இளைஞன் இருந்தது அவனுக்கு வியப்பை ஊட்டியது; அவனை முருகனாய்ப் பார்த்தான்.

'இவனோடு நீண்ட போர் நிகழ்ந்த வேண்டி வரும்' என்று மதித்தான்; "இவன் ஒரு மாவீரனாய் இருக்க வேண்டும்" என்று கண்டான்; இவனைப் போன்ற வீரர் இருப்பதால்தான் இராவணன் வலிமை மிக்கவனாய் இருக்கிறான், என முடிவு செய்தான்.

### மண்டோதரியைக் கண்டான்

வித்தியாதர மகளிர் உறையும் தெருக்களைக் கடந்தான், மண்டோதரி தங்கி இருந்த மண்டபத்தை அடைந்தான்; 'சீதையிடம் இருக்கத் தக்க வனப்பும் எழிலும் அவளிடம் இருப்பதைக் கண்டு, அங்கு அவளைக் காண முடியும்' என்று நம்பிக்கை கொண்டான்; அங்கே மண்டோதரி கண் அயர்ந்து உறங்கிக் கிடந்தாள்; மயன் மகளாகிய மண்டோதரியைச் 'சனகன் மகள்' என்று தவறாய் நினைத்தான்; 'சுகபோக சுந்தரியாக மாறி விட்டாளோ?' என்று மயங்கினான்; சோர்ந்த குழலும், கலைந்த துயிலும், அயர்ந்த முகமும், ஜீவனற்ற முகப்பொலிவும் அவள் மண்டோதரி என்பதை உணர்த்தின. 'நலம் மிக்க நங்கை ஒருத்தி மனைவியாய் இருக்க, மற்றொருத்தியை இவன் நாடுகிறானே' என்று வியந்தான்.

### இராவணன் மாளிகை

அடுத்தது அவன் அடைந்தது இராவணன் மாளிகை; அரம்பையர் அவன் அடிகளை வருடிக் கொண்டிருந்தனர். உறக்கம் கலைந்த நிலையில் அவன் காணப்பட்டான். நெருப்பை மடியில் கட்டிக் கொண்டு, அவனால் எப்படி அமைதியாய் உறங்க முடியும்? சீதையை நெஞ்சில் வைத்தவன், நெருப்பு வைத்த பஞ்சாய் எரிந்து அழிந்து கொண்டிருந்தான். அரக்கனைக் கண்ட அனுமன் பதைபதைத்தான்; அவன் பத்துத் தலைகளையும் கிள்ளி எறிந்து, பந்தாட விரும்பினான்; 'அவனை வென்று சீதையை மீட்பதை விடக்கொன்று முடிப்பதே மேல்' என்று நினைத்தான்; நின்று நிதானமாய் நினைத்துப் பார்த்தான்; 'கண்டு வரச் சொல்லி அனுப்பப்பட்டவனே தவிர கொண்டு வரச் சொல்லப்பட்டேன் இல்லை' என்பதை நினைந்தான். 'எல்லை மீறிய தொல்லைகளை விளைவிப்பது நல்லது அன்று' என்ற முடிவுக்கு வந்தான்; "இராமன் வீரத்துக்கு விளைநிலம் வேண்டும்" என்பதற்காக அவனை விட்டு வைத்து எட்டிச் சென்றான்.

'கட்டிய கட்டடங்களில் சீதை கால் அடி வைக்கவில்லை; என்பதை அறிந்தான்; அவன் சுற்றாத இடமே இல்லை; எட்டிப் பாராத மாளிகை இல்லை; அவனுக்கே அலுப்பு ஏற்பட்டு விட்டது; 'சலிப்பதால் பயனில்லை' என்று பயணத்தை மேலும் தொடர்ந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்குள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.

*– ஜெயகாந்தன்*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## பட்டினிச்சாவைத் தரவல்ல பதுக்கல் கலாசாரம் வேண்டாம்

அறங்களில் எல்லாம் தலையாய அறம் எதுவென்று யாரேனும் கேட்டால் அதற்கு வள்ளுவன் கூறுகின்ற பதில்,

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை*

என்பதாகும்.

அறம் பற்றி வகுத்தவர்களின் அறங்களில் எல்லாம் தலையாய அறம் நம்மிடம் இருப்பதை இல்லாதவர்களுக்கும் கொடுத்து அவர்களின் உயிர்களையும் காப்பாற்றுவதாகும்.

ஆக, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புகின்ற அறத்தை நாம் எல்லோரும் பின்பற்றுவது அவசியமாகும்.

எனினும் பொருளாதார நெருக்கடி நிறைந்த இன்றைய காலகட்டத்தில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து அவற்றைப் பதுக்கி வைக்கின்ற நடைமுறை தாராளமாக நடந்தாவதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

உணவுப் பொருட்கள் கிடைக்காமல் போய் விடும் என்ற அச்சம் காரணமாக அவற்றைப் பதுக்கி வைக்கின்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

இவ்வாறு உணவுப் பொருட்களைப் பணவசதி படைத்தவர்கள் பதுக்கி வைக்கின்றனர்.

இதனால் ஏழைகளும் அன்றாடம் கூலித் தொழில் செய்து சீவியம் நடத்துகின்ற மக்களும் கடும் பாதிப்படைகின்றனர்.

இதை நாம் கூறும்போது, அடுத்துவரும் மாதங்களில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று இந்த நாட்டின் ஆட்சித் தலைவராக இருக்கின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கூறும்போது, எவரும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைக்கவே செய்வர்.

உணவுப் பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியமை புத்திசாலித்தனமானதன்று.

ஏதோ நாட்டு மக்களுக்குத் தான் உண்மை கூறுவது போல காட்டிக் கொள்ளத் தலைப்பட்டு ஏழை மக்களின் வயிற்றில் அடித்ததைத் தவிர, பிரதமர் ரணிலின் கருத்தால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

ஆக, எவரும் எதையும் நிதானமாகச் சிந்தித்துக் கருத்துரைக்க வேண்டும் என்பதோடு, இப்போது உணவுப் பொருட்களைப் பதுக்குகின்ற கலாசாரம் உச்சமடைந்திருப்பதால், இதுவிடயத்தில் சரியான விநியோக முறைமையை அனைத்து விநியோகஸ்தர்களும் விற்பனையாளர்களும் பின்பற்றுவது வர்த்தகத் தர்மமாகும்.

ஆம், பணம் தருகிறார்கள். எனவே பொருட்களை விற்றுவிடுவோம் என்று எண்ணாமல், பொருத்தமான பங்கீட்டு நடைமுறையைப் பின்பற்றி ஏழை மக்களின் நுகர்வுக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்கக் கூடியதான தர்மத்தை வர்த்தகப் பெருமக்கள் செய்ய வேண்டும்.

இதற்கும் மேலாக, பணவசதி படைத்தவர்கள் ஏழை மக்களுக்குரித்தான உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து வீட்டில் பதுக்கி வைக்காமல், தங்களுக்குரித்தான நுகர்வுக்குரிய அளவை மட்டும் வாங்குவதும் தங்களிடம் இருப்பதில் இல்லாதவர்களுக்கும் கொடுத்து அவர்களின் உயிரையும் பாதுகாப்பதுதான் மிகப்பெரும் அறமும் புண்ணிய கருமமுமாகும்.

## 'கோட்டா கோ கம' போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆவது நாளில் மெழுகுவர்த்தி போராட்டம்

(கொழும்பு)

கோட்டா கோ கம போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 50 நாட்கள் நிறைவடையவுள்ள நிலையில் மெழுகுவர்த்தி ஏந்தும் போராட்டமொன்றிற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போராட்டத்தின் ஐம்பதாவது நாளான எதிர்வரும் 28ஆம் திகதி காலை பத்து மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

அதற்கு இணையாக கோட்டா கோ. கமவிலும் பண்டாரநாயக்க சிலை அருகே மெழுகுவர்த்தி ஏந்தும் போராட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'நாட்டுக்காக மெழுகுவர்த்தி ஏந்துவோம்' என்ற தலைப்பிலான இந்தப் போராட்டத்தில் கோட்டா கோ கமவுக்கு ஆதவரளிக்கும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள வருகை தருகின்றவர்கள் தேசியக் கொடி மற்றும் 21ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான பதாகைகளுடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

## பாராளுமன்ற உறுப்பினர் அத்துகோரள கொலை
### இதுவரை 14 பேர் கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கொலைச் சம்பவம் தொடர்பாக மேலும் 2 சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி நிட்டம்புவ நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாவலர் ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 14 சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில்
### 7 ஆம் திகதி பாராளுமன்றில் விசேட அறிக்கை

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாராளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வின்போது குறித்த அறிக்கையை வெளியிடவுள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கொரோனா; 14 பேர் அடையாளம்

கொரோனா தொற்று உறுதியான மேலும் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,800ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## வன்முறை தொடர்பில் ஆராய மூவர் அடங்கிய குழு
### ஜனாதிபதியால் நியமனம்

மார்ச் 31 ஆம் திகதியில் இருந்து மே 9 ஆம் திகதி வரை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் படைத்தளபதிகள் மூவர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னாகொட இந்த குழுவிற்கு தலைமை தாங்கவுள்ளார்.

ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் விமானப் படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்..

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான இல்லத்திற்கு அருகில் இடம்பெற்ற கலவரம் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையோரிடம் இன்று முதல் விசாரணைகள் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## எரிவாயு விநியோகம் இன்றும் இடம்பெறாது

(கொழும்பு)

வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகம் இன்றும் இடம்பெறாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த 3 நாட்களாக லிட்ரோ நிறுவனத்தினால் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினமும் குறித்த பணிகள் இடம்பெறாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஆத்திகமும் நாத்திகமும் உலகம் தோன்றிய நாள் தொட்டு இருந்து வந்தாலும் ஆத்திகம்தான் உயர்வு தரும்.

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான்
- வையத்துள் அலகையாய் வைக்கப்படும்.
- என்கிறார் திருவள்ளுவர்.

கசாப்புக் கடையில் ஆட்டை வெட்டுவது, வெட்டுபவனுக்குத்தான் பாவம். ஆடு முன்செய்த வினையென்று நினைப்பது பிழை. உங்கள் கையை ஒருவன் வெட்டுவான் என்றால் நான் செய்த வினையின் காரணம் என்று சும்மா இருப்பீரோ?

கடவுள் வடிவில், காது 'ஓ' வடிவில் இருக்கின்றது. அதில் 'ஓம்' என்கிற பிரணவ மந்திரத்தை உபதேசிக்கின்றனர். ஓ என்று அமைந்துள்ள காதில் புள்ளி வைத்தால்தான் 'ஓம்' என்று ஆகின்றது. இந்துக்களின் காது குத்தும் சடங்கு ஏற்பட்டது இதனால்தான்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து
### எல்லா விடைகளின் இலக்கு

உணர்ச்சிகளை தட்டியெழுப்புவதுதான் எண்ணங்களை மோனப்படுத்துவதற்கான சுலபமான வழி. ஏனெனில், உணர்ச்சிகளின் வாயிலாகத்தான் அமைதி, ஆனந்தம், அன்பு ஆகியவை தெரிகின்றன. இவை யாவும் உங்களுடைய இயல்பு. "நான் யார்?" என்ற கேள்விக்கு மௌனம் மட்டுமே ஒரே பொருத்தமான பதில். வார்த்தைகளால் ஆன எல்லா பதில்களையும் நீங்கள் விலக்கவிட வேண்டும். "நான் சூன்யம்" அல்லது " நான் அண்ட ஆன்மா" அல்லது "நானே ஆன்மா" போன்றவற்றையும் சேர்த்து விலக்கிவிடுங்கள். "நான் யார்?" என்ற கேள்வியிலேயே நில்லுங்கள். மற்ற பதில்கள் எல்லாம் வெறும் எண்ணங்களே. எண்ணங்கள் எப்போதும் முழுமையானவை அல்ல. மௌனம் மட்டும் முழுமையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 73

கேகாலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 573 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 840,648 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 93,405 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளரால், சப்ரகமுவ மாகாண சபையில் உள்ள கேகாலை மாவட்டத்திற்கு 18 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி கேகாலை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

**கேகாலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 573 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 840,648 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 93,405 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

கேகாலை மாவட்ட செயலகத்தில் 15.11.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 10 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 15 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 25 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

சில பரிந்துரைகள் எல்லை நிர்ணயம் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனக்கூறியிருந்தன. இவற்றுள் சில எல்லா தேர்தல் தொகுதிகளுக்குமான எல்லை நிர்ணயத்தை பற்றி கூறியிருக்கவில்லை.

எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேவையான மக்கள் தொகை, புவியியல் பிராந்திய தகவல்கள் மற்றும் இயல்பு தகவல்கள் போன்றவை பழைய பாராளுமன்ற தொகுதிகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) அடிப்படையில் அமையாமல் இருந்ததோடு, அவை கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப்பிரிவு ஆகிய நிர்வாக பிரிவுகள் அடிப்படையில் அமைந்து இருந்ததால் கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றை அடிப்டையாகக்கொண்டு எல்லை நிர்ணயம் செய்ய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் பிரேரணைகளுக்கு அமைய, குழுவானது பழைய பாராளுமன்ற தொகுதிகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளின்) எல்லைகள் என்பவற்றை பிரிக்காமல் போதுமான வரை தவிர்த்ததோடு இயலுமானவரை பிரதேச செயலகங்களை இணைத்து தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

பெறப்பட்ட பிரேரணைகளில் ஒன்று குறிப்பிட்ட 4 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி 4 தொகுதிகளை உருவாக்குமாறு பரிந்துரை செய்தது. பரிந்துரைக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையிலான சனச்செறிவு விகிதாசாரத்திற்கேற்ப இல்லாமல் இருந்ததாலும், 2017 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் 3(A) (4) (b) பிரிவின் நோக்கத்திற்கு அமையாததாலும் இப் பிரேரணை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத போதும் எல்லை நிர்ணயம் செய்யும் போது அப் பிரதேச செயலகப் பிரிவுகளை முடிந்த வரையில் சேர்த்து தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

பெறப்பட்ட பல பிரேரணைகள், சிறுபான்மை இனத்தவர்கள் (முஸ்லிம்கள்) பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யுமாறு மாவனெல்லைப் பிரதேசத்தை உள்ளடக்கிய தொகுதியொன்று எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தன.

**பெறப்பட்ட பல பிரேரணைகள், சிறுபான்மை இனத்தவர்கள் (முஸ்லிம்கள்) பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யுமாறு மாவனெல்லைப் பிரதேசத்தை உள்ளடக்கிய தொகுதியொன்று எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தன. இப் பிரேரணைகளில் சில மாவனெல்லைப் பிரதேசத்தை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்யுமாறு கேட்டுக்கொண்டன.**

இப் பிரேரணைகளில் சில மாவனெல்லைப் பிரதேசத்தை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்யுமாறு கேட்டுக் கொண்டன. இம் மாவட்டத்தில், பல பிரதேச செயலகப் பிரிவுகளில் பரம்பலாக வசிக்கும் முஸ்லிம்கள் 61,164 (7.3%) பேர் இருப்பதையும் அவர்களில் 42,873 பேர் மாவனெல்லைப் பிரதேசத்தை அண்டியுள்ள அடுத்தடுத்து வரும் 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்வதையும் குழு அவதானித்த போதும் அப் பிரதேசத்தை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்ய முடியவில்லை.

இதற்கான காரணம் இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு தேவையான சனத்தொகையில் அவர்களின் தொகை 30% இலும் குறைவாக இருந்ததே. எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை சிறுபான்மை இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது.

மேலும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து இயலக்கூடிய வகையில் குறிப்பிட்ட ஒரு தொகுதிக்குள் அவர்களின் வாக்குப்பலம் செறிவாக இருக்கும் வகையில் தொகுதி எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

வேறு சில பிரேரணைகள், மலைநாட்டுத் தமிழர்களின் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் தெரணியகல மற்றும் யட்டியந்தொட்டை பிரதேசங்களை உள்ளடக்கி தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

**வேறு சில பிரேரணைகள், மலைநாட்டுத் தமிழர்களின் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் தெரணியகல மற்றும் யட்டியந்தொட்டை பிரதேசங்களை உள்ளடக்கி தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.**

இம் மாவட்டம் பூராகவும், பல பிரதேச செயலகப் பிரிவுகளில் பரம்பலாக வசிக்கும் தமிழர்கள் 61,609 (7.3%) பேர் இருப்பதையும் அவர்களில் கூடுதலானோர் 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் செறிவாக வாழ்வதையும் குழு அவதானித்தது. எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து இயலக்கூடிய வகையில் குறிப்பிட்ட ஒரு தொகுதிக்குள் அவர்களின் வாக்குப்பலம் செறிவாக இருக்கும் வகையில் தொகுதி எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு பொதுவான பிரேரணை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யுமாறு தொகுதிகளின் எல்லை நிர்ணயம் அமைய வேண்டுமென விதந்துரைத்தது. இப் பிரேரணையின் பரிந்துரை, மேற்கூறப்பட்ட இரு பந்திகளுக்கு அமைய முடிந்தவரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட ஆலோசனைகளில், நான்கு குழுவிற்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு ஆணைக்கு உட்பட்டு அமையாமலோ அல்லது எதுவிதமான பிரேரணைகளையும் உள்ளடக்காமலோ இருந்ததால் குழு எதுவித நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, சிலவற்றுக்கு சரித்திர பிரசித்திபெற்ற பெயர் இடப்படப்பட்டுள்ளது. மற்றைய தொகுதிகளுக்கு அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

எந்தவொரு பிரேரணையிலும் தொகுதிகளுக்கு பெயரிடுவது சம்பந்தமாக பரிந்துரைகள் இருக்கவில்லை.

சுருக்கமாகக் கூறினால் 3 பிரதேச செயலகங்கள் கூறாக்காமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 4 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிக்குள் பிரிக்கப்பட்டும், 1 பிரதேச செயலக பிரிவு 4 தொகுதிக்குள் பிரிக்கப்பட்டும் சராசரி மக்கள் தொகையான 93,405 விட்டு - 6.6% மற்றும் + 5.3 % இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து கேகாலை மாவட்டம் 9 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்...

அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்தச் சம்பள உயர்வு அறிமுகப்படுத்தப் படும் என்று பிரதமர் அலுவலக வட்டாரங் கள் தெரிவித்தன.

மேலும் பட்ஜெட் உரையின்போது தனி யார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுக்கான கோரிக்கையை பிரதமர் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பள உயர்வுக்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு பட்ஜெட் தயாரிக்கும் அதிகாரிகளுக்குப் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசில் 2015ஆம் ஆண்டில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## எரிவாயுவை...

செயலகத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில் எரிவாயு பிரதான விநியோகஸ் தர் ஒத்துழைப்பு வழங்கத் தவறியுள்ள தன் காரணமாக இராணுவத்தினரின் உதவியை நாட ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் லிட்ரோ காஸ் நிறுவனத் தினரால் நாடுபூராகவும் எரிவாயு விநி யோகிக்கப்பட்டுவரும் நிலையில்,

யாழ்.மாவட்டத்தில் எரிவாயுவினை குடும்ப பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்க முற்பட்டபோது லிட்ரோ எரிவாயு விநி யோகஸ்தர்கள் ஒத்துழைப்பு தரவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் நாட்களில் பிர தேச செயலகங்கள் ஊடாக கிராம சேவை யாளர்களின் ஒத்துழைப்புடன் குடும்ப அட்டை மூலம் எரிவாயு விநியோகம் இடம் பெறவுள்ளதாகவும் அதேவேளை எரி வாயு சிலிண்டர் விநியோகிக்கும்போது எரிவாயு விநியோகஸ்தர்களால் இடை யூறு ஏற்படுத்தப்படும் என்பதை கருத்திற் கொண்டு இராணுவத்தினரின் உதவி யினை பயன்படுத்தி குறித்த எரிவாயு சிலிண்டரை பொதுமக்களுக்கு விநி யோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் யாழ்.மாவட்ட செயலக உள் ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## அனைத்து ஆதர...

மான ஆதரவையும் வழங்கி வருவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரி வித்துள்ளார்.

இலங்கை பாரிய பொருளாதார நெருக் கடிக்கு முகங்கொடுத்து, கடின காலங்களை கடந்து வருவதாக மோடி தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு நேற்று விஜயம் மேற் கொண்ட நிலையில் அங்கு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு நெருங்கிய நண்பன் மற் றும் அண்டைய நாடு என்ற வகையில் இந்தியா சகலவிதமான ஆதரவையும் வழங்கி வருவதாகவும் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

ஒன்றின் கீழ் பிள்ளையார் சிலை பிர திஷ்டை செய்யப்பட்டு பல வருடங்களாக அப் பகுதி வர்த்தகர்களும் வீதியால் செல்வோரும் வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலுப்பையடிப் பகுதி யில் அமைந்துள்ள வன்னி பௌத்த இளைஞர் சங்க அலுவலகத்திற்கு முன் பாக வீதியில் செல்வோர் தரிசிக்கும் வகையில் புதிதாக பீடம் நிறுவப்பட்டு புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு, மின் ஒளிகளும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த புத்தர் சிலை உள்ள பகுதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் தொல்பொருள் திணைக்கள பிராந்திய காரியாலய வீதி யில் செல்வோர் காணக்கூடியதாக ஏற் கெனவே புத்தர் சிலை உள்ள நிலையில் தற்போது புதிதாக புத்தர் சிலை வைக்கப் பட்டுள்ளமை பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதியா என பொதுமக்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

அத்துடன், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா, மன்னார் வீதியில் தமிழ் மக்களது குடிமனை உள்ள பகுதி யில் இயங்கி வரும் வவுனியா தெற்கு சிங் கள பிரதேச செயலக வளாகத்திலும் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு பிரித்தோதல் இடம்பெற்றிருந்தது.

மேலும், இலுப்பையடிப் பகுதியில் புத் தர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு முன்பாக உள்ள பிள்ளையார் ஆலயத் தில் காணப்பட்ட பிள்ளையார் சிலை ஜன வரி 23ஆம் திகதி காணாமல் போயிருந்த நிலையில் மீள பிரதிஷ்டை செய்யப்பட்டு மக்களாலும் வர்த்தகர்களாலும் வழிபடப்ப ட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## கடன் மறுசீரமை...

யிலேயே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக தெளிவான புரிதலை பெற்றவுடன் இலங் கைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகை யில் பொருளாதாரத் தளம் அமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரம் தவ றான நிர்வாகத்தின் விளைவாக வீழ்ச்சி யடைந்துள்ளதாக தற்போதைய பொருளா தார நெருக்கடி நிலைமையைக் கண்டு மனம் உடைந்துள்ளதாக அவர் தெரிவித் தார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை யின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவு வதற்கு எப்போதும் தயாராக இருப்பதாக வும் தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கையில் ஏற் கெனவே செயற் பட்டு வருவ தாக வும் அவர் கூறி னார். (ம-7)

### சாவகச்சேரியில் விபத்து

# முல்லை.முத்தையன்கட்டு பாடசாலை அதிபர் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதில் படுகாயம் அடைந்த முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலது கரை முத்துவிநாயகர் தமிழ்க் கலவன் பாடசாலை யின் அதிபர் கந்தையா சத்தியசீலன் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஏ9 நெடுஞ்சாலையில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் மோட் டார் சைக்கிளை டிப்பர் வாகனம் மோதித் தள்ளிய தால் விபத்து நிகழ்ந்திருந்தது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று அவர் உயிரி ழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் முல் லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் என்றும் அவர் முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலது கரை முத்துவிநாயகர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் என்றும் தெரிய வந்துள்ளது. (ம-7)

## நெருக்கடி...

நேற்றுக் காலை வங்கிகளின் தலை வர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத் துடன் இணக்கப்பாடு எட்டப்படும்வரை இந் தப் பிரச்சினைகளுக்கு உறுதியான தீர் வைக் காண்பது கடினம் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய வாடிக்கையாளர்களின் தேவைகளின் அடிப்படையில் கடன் ஒத்தி வைப்பு நிவாரணம் வழங்குவதில் கவ னம் செலுத்தப்பட்டுள்ளதாக வங்கி தெரி வித்துள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மத்திய வங்கி யின் ஆளுநர் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7)

## போரா...

அலரிமாளிகைக்கு அருகிலுள்ள 'No Deal Gama போராட்டக் களத்தில் இருந்து நேற்று முற்பகல் பேரணியொன்று ஆரம்பிக்கப்பட்டது.

பேரணி கொழும்பு பிளவர் வீதியை சென்றடைந்தபோது, பொலிஸார் இடை மறித்தனர்.

இதன்போது அங்கு அமைதியின்மை ஏற்பட் டது.

பின்னர் அந்தக் குழுவினர் மற் றொரு வழியாக பிரதமரின் இல்லம் அமைந்துள்ள பகு திக்குள் செல்ல முயன்றனர்.

அங்கும் பொலி ஸார் அவர்களை தடுத்ததுடன், நீதி மன்ற உத்தரவை அறிவித்தனர்.

இதனையடுத்து, போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலை ந்து சென்றனர்.(ம-7)

### தன நிதானய

டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 21.05.2022
சீட்டிழுக்கப்பட்ட திகதி 26.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 797
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 03 13 23 76
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324 — உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### மஹஜன சம்பத

திகதி 2022/05/26
சீட்டிழுப்பு இலக்கம் 4767
ஆங்கில எழுத்து E — வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 4 6 9 6 3
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
லொத்தர்சீட்டு அச்சிடப்பட்ட திகதி 2022.05.21 — சீட்டிழுப்பு திகதி 26.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 076
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 24 30 51 — மேஷம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 26/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1115
வெற்றி எழுத்து T — சுப்பர் இலக்க 16 — வெற்றி இலக்கங்கள் 19 29 49 77

### கொவிசெத

திகதி 2022.05.26 — சீட்டிழுப்பு இலக்கம் 3009
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 14 25 61 62
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1742 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.05.19 — தினம் வியாழக்கிழமை
D 17 19 44 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,216,400/-

### சனிதா

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.19
சீட்டிழுப்பு இல : 3903
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,023,940/-
வெற்றி இலக்கங்கள் 02 15 26 33 — ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-05-19 — வெற்றி வாரம் 3454 — வர்ணம் கரிலம்
வெற்றி இலக்கங்கள் 02 06 26 29 — தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,615,660/-

### 12

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 29 09 10 20 59 (சுப்பர் இலக்கம் 29)
சீட்டிழுப்பு வாரம் 918 — வர்ணம் செம்மஞ்சள் — திகதி 2022.05.19 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 238,264,387/-
தொலை./பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1566
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.05.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,370,640/-
வெற்றி இலக்கங்கள் 23 24 45 59 — ஆங்கில எழுத்து G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS வகுப்புக்கள்

**புதிய பிரிவுகள் 01.06.2022 அன்று ஆரம்பம்**

- 10 வருட கால IELTS அனுபவமுள்ள ஆசிரியர்
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- தனிப்பட்ட கவனிப்புக்கள்
- 6 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கான உத்தரவாதம்
- தனிப்பட்ட நேரத் தெரிவுகள்
- மிகக் குறைந்த கட்டணங்கள்

**31.05.2022 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.** (11624)

**WINSTAR CONSULTANTS (PVT) LTD**
இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
**077 395 0857**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு. (நிலப்பரப்பு)**

- 1½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

(C-4379)

**பார்வையிடும் நேரம்** காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 623 4204, 077 288 0152, 076 658 3621**

# IELTS

NEW BATCH ஆரம்பம்
Cont : 077 798 9830
By - B.Murali
Speking & Grammar Class for Grade 7 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள்.
இல.53, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (11616)

# விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கடைக்குரிய தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு (11629)
**077 214 6148**

german cooperation | Supported by the Federal Ministry for Economic Cooperation and Development | Coordinated by sequa | Implemented by | Local Project Partner CCIY | cooperation partner AHK | BM Partnership

## வடமாகாணத்தின் தொழில்துறை வளர்ச்சியில் தகவல் தொழிநுட்பத்தின் பங்கு

**இணையவழி கருத்தரங்கு**

Meeting ID : 860 1063 4531
Passcode : 183925

காலம் : 28- 05 -2022 சனிக்கிழமை
காலை 10.30 தொடக்கம் 12.00 வரை

**வளவாளர்கள்**



**Mr. Robinson B Prashanthan**
Chairman – Northern Chamber of Information Technology (NCIT)
Chairman/CEO- Innovay (PVT)Ltd.



**Mr. Y. Sharmmhik**
Entrepreneur , Trainer

CCIY
No: 55,
Kachcheri Nallur Road, Jaffna.
+94 21 222 6608|9 / +9470366 3600 - 4
e-mail: info@cciy.lk | web: www.cciy.lk
(C-4375)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.


(11628)

தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**


# மரண அறிவித்தல்



# கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

( ஓய்வுபெற்ற தபால் அதிபர், சமாதான நீதவான் )

**தோற்றம் : 1946.03.17 மறைவு : 2022.05.24**

கதிர்காம கோவிலடி வதிரியைப் பிறப்பிடமாகவும் 'தேவி வாசா' இலகடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள் கடந்த 24.05.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (கந்தவனம்) - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் - சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணிதேவி (செல்லம்) அவர்களின் பாசமிகு கணவரும் கிருஸ்ணபிரபா (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையும் தவரூபன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும் செல்வநாயகி, கிருஸ்ணராஜா (கனடா), காலஞ்சென்ற ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணன் (முத்து), காலஞ்சென்ற தவமலர், நவரத்தினராஜா (ஓய்வுபெற்ற பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம்), மகாலிங்கசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சூரியன் (கனடா), நிலா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கமலநாயகி, விமலநாயகி, தேவரஞ்சினி, மனோரஞ்சினி, தவச்செல்வன், சிறிரஞ்சினி, அச்சுதன், அஜிதா, ஜேந்தன், வனஜா, டிலான் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிகரன், சறோஜினி, சுதாஜினி ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.05.2022) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4372)

"தேவி வாசா"
இலகடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.